## 28.6 மாநில திட்டக் குழுவின் இரண்டாவது அறிக்கை கால்நடை வளர்ப்பு மீதான அரசின் முடிவுகள்

கால்நடை பராமரிப்பு (ம) மீன் (கா.ப.2) துறை

அரசாணை (நிலை) எண்.200 நாள் : 22.08.1997

படிக்க :

அரசாணை (நிலை) எண்.75, ஊரகவளர்ச்சி (சி1) துறை, நாள்: 14.03.1997.

**ஆணை**

இந்திய அரசியலலைமைப்பில் 73–வது திருத்த சட்டத்திற்கு இணங்க உருவாக்கப்பட்ட மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளான ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிக்ளுக்கு தேர்தல்கள் நடைபெற்று, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பதவி ஏற்றுள்ளனர். மேற்குரிய சட்டத்தின் பிரிவு கூறு 243 ஜி மற்றும் 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 257–க்கு இணங்க, பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக நிதிக்காண திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தவும் மற்றும் 1994– ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பட்டியல் (IV) –ல் உள்ள இனங்களைச் செயல்படுத்தவும் தேவையான பொறுப்புகளை மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும், ஆகவே எந்தெந்த பொறுப்புகளை ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்கலாம் என்பது குறித்து மாநில திட்டக்குழு கேட்டுக் கொள்ளப்பட்டது. அவ்வாறே மாநிலத் திட்டக்குழு தனது இரண்டாவது அறிக்கையில் பிறவற்றோடு, கால்நடை வளர்ப்பு தொடர்பான இனங்கள் மீது அரசுக்கு அறிக்கைகளை அனுப்பியுள்ளது

2. மாநிலத் திட்டக்குழுவின் இரண்டாவது அறிக்கையில், மேற்சொன்ன கால்நடை வளர்ப்பு பற்றிய பரிந்துரைகளைச் சம்மந்தப்பட்ட துறையுடன் கலந்து ஆய்வு செய்தததது. ஆய்வுக்குப்பின்னர் கால்நடை பராமரிப்புத் துறையின் திட்டப் பணிகளைச் செயல்படுத்துவதிலும், கண்காணிப்பதிலும் ஊராட்சி அமைப்புகளுக்கு உரிய பொறுப்புகளை ஒப்படைக்க அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, இவ்வாணையின் பிறசேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்புகளை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க ஆணையிடப்படுகிறது.

3. மேற்சொன்ன துறைக்கு நிர்வாகத் துறையான கால்நடை பராமரிப்பு துறையானது தமது நிர்வாகத்தின் கீழிருக்கும் ஒவ்வொரு நிலையிலும் மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள், அவைகளை ஒதுங்கிணைக்கும் அலுவலர் பற்றி விரிவாகக் குறிப்பிட்டு உடனே அறிவுரைகள் வழங்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**மோகன் வர்கீஸ் சுங்கத்**
அரசு செயலாளர்

**பிற்சேர்க்கை**

திட்டங்களை செயல்படுத்துதல், மேற்பார்வையிடுதல், ஆய்வு செய்தல் தொடர்பாக
அதிகாரங்களை ஒப்படைத்தல் – (கால்நடை வளர்ப்பு)

| தொடர் எண். | திட்டங்கள் / திட்டப்பணிகள் | ஊராட்சிகள் | ஊராட்சி ஒன்றியங்கள் | மாவட்ட ஊராட்சி |
|---|---|---|---|---|
| 1 | கால்நடை துணை மையம் / மருத்துவ மனை (மாநிலத் திட்டம்) | – | – | மேற்பார்வை / மறு ஆய்வு |
| 2 | கிடாரி உற்பத்தித் திட்டம் (மாநிலத் திட்டம்) | | | |
| 3 | துணை மையங்களில் செயற்கை முறையில் இனபெருக்கம் (வெளிநாட்டு உதவி பெறும் திட்டம்) | பயனீட்டாளர் களை இனம் கண்டறிதல் | செயற்படுத்துதல் / பாா்வையிடல் / மேற்பார்வை | மறு ஆய்வு |
| 4 | ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வசதிகள் | பயனீட்டாளர் களை இனம் கண்டறிதல் | செயற்படுத்துதல் | மேற்பார்வை / மறு ஆய்வு |
| 5 | கிராம அளவில் / மாவட்ட அளவில் கால்நடை மற்றும் கோழியின கண்காட்சி நடத்துல் (மாநிலத் திட்டம்) | செயற்படுத்துதல் | மேற்பார்வை | மேற்பார்வை / மறு ஆய்வு |
| 6 | இறைச்சிக் கொட்டில் பராமரிப்பு (மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம்) | செயற்படுத்துதல் | செயற்படுத்துதல் | மேற்பார்வை / மறு ஆய்வு |
| 7 | செம்மறி ஆடு வளர்ப்பதற்காக சிறு உழவர்களுக்கு நிதியுதவி (மாநில மற்றும் மத்திய திட்டம்) | பயனீட்டாளர் களை இனம் கண்டறிதல் | செயல்படுத்துதல் | மேற்பார்வை / மறு ஆய்வு |
| 8 | பன்றி வளர்ப்பு (மாநிலத் திட்டம்) | பயனீட்டாளர் களை இனம் கண்டறிதல் | செயல்படுத்துதல் | மேற்பார்வை / மறு ஆய்வு |
| 9 | விலங்குகள்,பறவைகள் வழங்குதல் (மாநிலத் திட்டம்) | பயனீட்டாளர் களை இனம் கண்டறிதல் | செயல்படுத்துதல் / பார்வையிடுதல் | மேற்பார்வை / மறு ஆய்வு |
| 10 | ஐந்தாண்டுகளுக்கொரு முறை கால்நடை குறித்த கணககெடுப்பு (மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம்) | – | – | மேற்பார்வை / மறு ஆய்வு |
| 11 | முயல் வளர்ப்பு, கோழி வளர்ப்புக்கு நிதியுதவி (மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம்) | பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல் செயல்படுத்துதல் | செயல் படுத்துதல் | மேற்பார்வை / மறு ஆய்வு |
| 12 | மேய்ச்சல் நில மேம்பாட்டு நிதியுதவி (மாநிலத் திட்டம்) | பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல் | செயல் படுத்துதல் | பார்வையிடுதல் |
| 13 | பால்பண்ணை கூட்டுறவு சங்கங்கள் (மத்திய பொருளுதவி பெறும் திட்டம்) | உதவி | மறு ஆய்வு | மறு ஆய்வு |
| 14 | ஒருங்கிணைந்த பால்பண்ணை மேம்பாட்டுத் திட்டம் (மத்திய பொருளுதவி பெறும் திட்டம்) | – | மறு ஆய்வு | மறு ஆய்வு |
| 15 | தரமான கறவை மாடுகள் வழங்குதல் (ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்) | பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல் | மறு ஆய்வு | மறு ஆய்வு |
| 16 | மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் திட்டப் பணிகள் (மாநிலத்திட்டம்) | பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல் | பார்வையிடல் / மேற்பார்வை / மறு ஆய்வு | மறு ஆய்வு |
| 17 | மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் திட்டப்பணிகள் (மாநித் திட்டம்) | பயனீட்டாளர்களை இனம் கண்டறிதல் | பார்வையிடல் / மேற்பார்வை / மறு ஆய்வு | மறு ஆய்வு |
| 18 | மத்திய பொருளுதவி பெறும் திட்டம் TDP –ன்கீழ்திட்டப்பணிகள் | | | |

**மோகன் வர்கீஸ் சுங்கத்**
அரசு செயலாளர்